பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 05 2026 SUNDAY 6.30 PM**

**மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1. தமிழகத்தின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்று முதலமைச்சர் திரு விஜய் அறிவித்துள்ளார்.

2. சட்டப்பேரவையின் இடைக்கால அவைத்தலைவராக திரு கருப்பையா இன்று பதவியேற்றார்.

3. 200 யூனிட் இலவச மின் திட்டத்தோடு தற்போது நடைமுறையில் உள்ள 100 யூனிட் இலவச மின் திட்டமும் தொடரும் என்று தமிழக அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

4. வங்கக்கடல் பகுதியில் அடுத்த 48 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலகக் கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

தமிழகத்தின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்று முதலமைச்சர் திரு விஜய் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் முதலமைச்சராக பதவியேற்ற பின்னர், உரையாற்றிய அவர், முந்தைய அரசு கஜானாவை காலி செய்துவிட்டு சென்றதாக குற்றம் சாட்டினார்.

***(Sound Byte — விஜய் (1) - 43 Sec. )***

தமிழகத்தில் உண்மையான, சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மைக்கான அத்தியாயம் தொடங்கியுள்ளதாகவும் திரு விஜய் கூறினார்.

***(Sound Byte — விஜய் (2) 33 Sec.)***

இதனைத்தொடர்ந்து தலைமைச்செயலகம் சென்ற முதலமைச்சர், பல்வேறு கோப்புகளில் கையெழுத்திட்டார்.

பின்னர், மாநிலத்தின் சட்டம் — ஒழுங்கு நிலை குறித்து அதிகாரிகளுடன் விரிவாக அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பெண்களுக்கான பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்தும், போதைப்பொருள் தொடர்பான குற்றங்களை தடுப்பது குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சியாக இதுபோன்ற ஆய்வுக்கூட்டங்கள் நடைபெறும் என்று முதலமைச்சர் இந்த கூட்டத்தில் தெரிவித்தார்.

இதற்கிடையே, திருச்சி கிழக்கு, பெரம்பூர் என இரண்டு தொகுதிகளில் வெற்றிபெற்றிருந்த நிலையில், திருச்சி-கிழக்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை திரு விஜய் ராஜினாமா செய்துள்ளார்.

இந்நிலையில், தமிழக சட்டப்பேரவையின் இடைக்கால அவைத்தலைவராக திரு கருப்பையா இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு இடைக்கால அவைத் தலைவர் திரு கருப்பையா பதவி பிரமாணம் செய்துவைக்கிறார்.

சட்டப்பேரவை உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதற்கான தேர்தல் ஆணையத்தின் சான்றிதழுடன் இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பேரவைத் தலைவர் மற்றும் பேரவை துணைத்தலைவருக்கான தேர்தல் நாளை மறுநாள் காலை ஒன்பதரை மணியளவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர், சட்டப்பேரவையில் திரு விஜய் நம்பிக்கை வாக்கு கோரவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு விஜய்க்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள செய்தியில், மாநிலத்தின் வளர்ச்சியை முன்நிறுத்தி சிறப்பாக செயல்படுமாறு வாழ்த்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழக அரசின் நிதிநிலை பற்றி கடந்த பிப்ரவரி மாத பட்ஜெட்டிலேயே தெளிவாக சொல்லப்பட்டிருந்ததாக திமுக தலைவர் திரு மு க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பத்து லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு கடனை வைத்துவிட்டு, கஜானாவை துடைத்துவிட்டதாக திரு விஜய் கூறியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நிதிநிலை அறிக்கைக்கு பின்னர்தான் திரு விஜய், பல்வேறு வாக்குறுதிகளை அளித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை விரைவில் திரு விஜய் நிறைவேற்றுவார் என்று தாம் நம்புவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை தவெக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெண்களுக்கு எதிரான குற்றங்களை கட்டுப்படுத்த சிறப்பு அதிரடிப்படை, போதைப்பொருள் புழக்கத்தை ஒழிக்க

தனிப்பிரிவுகள் போன்ற தவெக அரசின் அறிவிப்புகள் வரவேற்கத்தக்கது என்று தெரிவித்துள்ளார்.

டாஸ்மாக் கடைகளை படிப்படியாக மூடி, மாநிலத்தில் பூரண மதுவிலக்கை தவெக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழக முதலமைச்சராக திரு விஜய் பொறுப்பேற்ற பின்னர் அறிவிக்கப்பட்ட 200 யூனிட் இலவச மின் திட்டம் குறித்து மாநில அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதன்படி, 500 யூனிட்டுக்கு குறைவாக பயன்படுத்துபவர்களுக்கு 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

500 யூனிட்டுக்கும் கூடுதலாக பயன்படுத்துபவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள 100 யூனிட் இலவச மின்சாரம் நடைமுறை தொடரும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் இருமாதங்களுக்கு 500 யூனிட் மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு 200 யூனிட் மின்சாரம் கட்டணமின்றி

வழங்கப்படும் என்று தவெக அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு சண்முகம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 500 யூனிட் மின்சாரத்திற்கு மேல் பயன்படுத்தும் வீடுகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள 100 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் தொடரும் என்ற அறிவிப்பும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் நீண்டகாலமாக தொடக்கத்தில் தமிழ்தாய் வாழ்த்தும், நிறைவில் தேசிய கீதமும் பாடப்படும் நடைமுறைதான் கடைபிடிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் பதவியேற்பு விழாவில் இந்த முறை மாற்றப்பட்டுள்ளது ஏற்புடையது அல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

இனிவரும் அரசு நிகழ்ச்சிகளில் ஏற்கனவே கடைபிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு சண்முகம் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இதே கோரிக்கையை விடுத்துள்ளது.

<<<<<<>>>>>>

தமிழக மக்களின் நலனையும், மாநிலத்தின் முன்னேற்றத்தையும் முதன்மையாக கொண்டு, தவெக அரசு செயல்பட வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜனநாயக பொறுப்புடனும், மக்கள் நல கடமையுடனும் தவெக அரசு சிறந்த ஆட்சியை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

முதலமைச்சர் பதவியேற்பு விழாவில் தாம் கலந்துகொண்டு திரு விஜய்க்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 48 மணிநேரத்தில் உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 55 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் கோட்டத்தில் மின் நுகர்வோர் குறைதீர் கூட்டம் நாளை மறுநாள் காலை 11 மணிக்கு தொடங்கி, பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் நாளை முதல் மீண்டும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் குழு பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் தனிநபர் பிரிவில் **Sahil Jadhav** வெண்கலப்பதக்கம் வென்றார்.

---------------

மெக்ஸிகோ சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Shriyanshi Valishetty** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **21-19, 21-12** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Ella Lin**-ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் பிரித்வி கிருஷ்ணமூர்த்தி ராய் — கிருஷ்ண பிரசாத் **Garaga** இணையும் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

**<<<<<<END>>>>>>**